மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: 1976-ல் கூட்டுறவுத் துறையில் இயற்றப்பட்ட தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டம் பழங் குடியினர் வாழும் பகுதிகளில் எவ்விதப் பயனும் மாற்றமும் அளிக்கவில்லை என அறியப்பட்டது. ஆகவே பழங்குடியினருக்கு கடன் நிவாரணம் அளிக்கும் வகையில் ஒரு சிறப்புச் சட்டம் இயற்றுவது அவசியம் என வலியுறுத்தப்பட்டது. பழங்குடியினர் எவ்வளவு வருவாய் உள்ளவராயினும் எவ்வளவு நில அளவு உடையவராயிருப்பினும் அவர்களுக்கு கடன் நிவாரணம் அளிக்க சட்டமியற்ற வேண்டுமென அமைச்சர் குழுவால் கொள்கை யளவில் முடிவெடுக்கப்பட்டது. அமைச்சரவையில் முடிவு செய்யப்பட்டதற்கிணங்க ஒரு சட்ட முன்வடிவு தயாரிக்கப் பட்டு சட்டத்துறைக்கு அனுப்பப்பட்டது. சட்டத்துறை இச் சட்ட முன்வடிவில் சில மாற்றங்கள் செய்யக் கோரி இத் துறைக்கு அனுப்பியுள்ளது. விரைவில் அது பரிசீலனை செய்யப்பட்டு இந்தக் கடன் நிவாரணச் சட்டம் மிக விரைவில் நிறைவேற்றப்படும்.

திரு. என். வரதராஜன்: இந்த மலைவாழ் மக்கள் அறியாமை யிலும், கல்லாமையிலும், வறுமையிலும் வாடும் மக்கள். அவர்கள் கடனுக்காக கந்துவட்டி, சந்தை வட்டி, வார வட்டி என்று பெறப்பட்டு அவர்கள் இன்று கொத்தடிமைகள் போல் வாழ்ந்து வருகிறார்கள். ஆகவே அவர்களுக்கு கடன் நிவாரணம் அளிக்கக்கூடிய முறையில் இந்தச் சட்டத் திருத்தம் வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தற்போது அது குறித்த விவரம் என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்தை அனுசரித்து அது இயற்றப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளவர்களின் வயது வரம்பில் விலக்களிக்கும் திட்டம்.

*வினா எண். 966—திரு. எம். கே. ராஜமாணிக்கம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலைவாய்ப்பு அலுவலகத்தில் முறையாக பதிவு செய்து அவர்களுக்கு வேலை வாய்ப்பு தகுதி வயதிற்குள் எந்த ஒரு நேர்முக தேர்வும் வராமல் தகுதி வயதை இழந்தவர்களுக்கு வயது வரம்பில் இருந்து விலக்கு அளிக்கப்படுமா?

(ஆ) வேலைவாய்ப்புக்கு தகுதி என நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பு மேலும் 3 ஆண்டுகள் உயர்த்தப்படுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) மற்றும் (ஆ) மேற் கண்ட வினாக்களில் குறிப்பிட்ட பொருள் பற்றிய திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எம். கே. ராஜமாணிக்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஆய்விலே உள்ளதாக அறிவித்திருக்கிறார்கள். அரசு ஊழியர்களுடைய ஓய்வு பெறும் வயதை 55—லிருந்து 58 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். அதன் காரணமாக வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்திருக்கிறது. இந்தக் குறையைப் போக்க அரசு என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மூலக் கேள்விக்கு இது பொருந்தாது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில அரசுத் துறைகளிலே அல்லது அரசுப் பணிகளிலே தற்காலிகமாக சிலர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி தற்காலிகமாக பணியாற்றுபவர்கள் நிரந்தரமாக்கப்படுவதற்கு, அதே துறையிலோ அல்லது வேறு துறைகளிலோ, வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து அது பற்றி தகவல் கொடுத்து அட்டை வாங்கிவர வேண்டியிருக்கிறது. எனவே, அரசுத் துறையிலே அவர்கள் எவ்வளவு காலம் தற்காலிகமாகப் பணியாற்றுகிறார்களோ, அந்தக் காலத்தை அவர்கள் பணியிலே சேருவதற்கு அந்த வயது வரம்பை நீட்டித்துக் கொடுக்க இந்த அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு தனிக் கேள்வி போட்டால், விடை அளிக்கப்படும்.

திரு. எல். இளையபெருமாள்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லியபடி வேலை வாய்ப்பு அலுவலகத்திலே குறிப்பாக ஆதி திராவிட மக்கள் மலை வாழ் மக்கள் ஆகியோருக்கு தகுந்த முறையில் அவர்களே அனுப்பினால் ஒழிய, அவர்களுடைய சதவீதத்திற்கான அளவிலே அனுப்புவதில்லை. அப்படி அனுப்பாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அந்த மாதிரி இனியும் நடைபெறாமல் இருப்பதற்கு தமிழகத்திலுள்ள எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சுகளுக்கு அப்படி சதவிகிதப்படி அனுப்பாமல் இருந்தால், அனுப்பும்படி ஒரு தாக்கீதை இந்த அரசு அனுப்ப முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வயது உச்சவரம்பைக் கடக்கும் நிலையில் உள்ளவர்களுக்காக இந்த அரசு சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதைக் களைய வேண்டுமென்ற எண்ணத்தில், சமுக, பொருளாதாரக் காரணங்களால் அரசுப் பணிகளுக்கு உரிய தகுதிகளை மிகவும் தாமதமாகவே அடையும் பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட மற்றும் மலைசாதி வகுப்புகளைச் சார்ந்த வேலை தேடும் இளைஞர்களுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்தில் இந்தத் திட்டம் தற்போது உருவாக்கப்பட்டிருக்கிறது. அதன்படி, பின் தங்கிய தாழ்த்தப்பட்ட மற்றும் மலை சாதி வகுப்புகளைச் சார்ந்த உச்ச வயது வரம்பினைக்கடந்த

வேலை தேடுவோர் நிலையான அல்லது தற்காலிக வேலைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர்களுக்கு உச்ச வயது வரம்பிலிருந்து 5 ஆண்டுகள் தளர்த்தப்படலாம் என்றும், பின்தங்கிய தாழ்த்தப்பட்ட மற்றும் மலைஜாதி வகுப்புக்களைச் சார்ந்த உச்ச வயது வரம்பினைக் கடந்த வேலை தேடுவோருக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகத்தினரால் நடத்தப்பெறும் போட்டித் தேர்வுகளை எழுத இப்பொழுது தரப்படும் சந்தர்ப்பங்களுக்கு மேலாக மேலும் மூன்று சந்தர்ப்பங்கள் அளிக்கப்படலாம என்கிற திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் குறையிருந்தால், அதைக் களைவதற்கு இந்த அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சென்னை நகரில் மண்ணெண்ணை விநியோகத்தை தனியாரிடம் விடுதல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: "சென்னை நகரில் குடும்பக் கார்டுகளுக்கு தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் வழங்கி வந்த மண்ணெண்ணையைத் தனியார் வழங்க உத்தரவிட்டுள்ளதால், மக்கள் மத்தியில் எழுந்துள்ள கொந்தளிப்பான நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்று கேட்டு திருவாளர்கள் மு. அம்பிகாபதி, பொ. உத்திராபதி, டி. கே. நல்லப்பன், என். எஸ். வி. சித்தன், பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர் இது எப்படி அவசர முக்கியம் என்பது குறித்துச் சுருக்கமாக கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிற மண்எண்ணை தனியாருக்கு கொடுத்து விநியோகம் செய்யப்படுவதாக எங்களுக்குத் தகவல் கிடைத்தது.தனியார் விநியோகம் என்பது அறவே ஒழிக்கப்பட்ட வேண்டுமென்று நாங்கள் கூற விரும்புகிறோம். எனென்றால், சென்னை நகரத்தில் வாழும் சாதாரண ஏழைய எளிய மக்கள், அவர்களுக்குத் தேவையான மண்ணெண்ணை எந்த நேரத்திலும் பெற்றுக்கொள்ளும் வகையில் தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக அல்லது கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாகத்தான் வழங்கப்பட வேண்டும்.